
www.padippakam.com



# துப்பாக்கிக் கலாச்சாரத்தில் இருந்து மீள்வது எப்போது ?

- ஜயபால ஸ்ரீரணிகம -

படிப்பகம்

www.padippakam.com

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை ஒழுங்காகத் தேர்தல் நடத்திக் கொண்டிருக்கின்ற மூன்றாம் உலக ஜனநாயகத்தின் சிறந்த ஒரு முன்மாதிரியாக 1982ம் ஆண்டு வரை இலங்கை கருதப் பட்டு வந்தது என்பது என்னவோ உண்மை தான்.

இந்த ஜனநாயக நடை முறையை மாற்றிப் பொதுசன வாக்கெடுப்பு மூலம் தனது ஆட்சிக் காலத்தை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடித்துக் கொண்டது யு.என்.பி அரசு.

1948ம் ஆண்டு இலங்கை சுதந்தரம் பெற்றதிலிருந்து உருவான ஒரு பாரளுமன்ற ஜனநாயகப் பாரம்பரியத்திற்கு விழுந்த மரண அடி இது. இந்த நாட்டின் சமூக அரசியல் வாழ்க்கையை வார்த்தெடுப்பதில் கணிசமான செல்வாக்குச் செலுத்திய ஒரு சோசலிச ஜனநாயக அரசியற் கலாச் சாரத்தின் குரல்வளையை இது நெரித்தது.

1977ம் ஆண்டு பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மைப் பலத்துடன் அதிகாரத்தினைக் கைப்பற்றிக் கொண்ட யு.என்.பி. பாராளு மன்ற ஜனநாயகம் என்ற போலி நிழலின் கீழ் எதேச்சதிகார அரசியல் அமைப்பை நோக்கி நடை போட்டது. மேலும் 'சுதந்திரம்' அடைந்த காலத்திலிருந்து தொடர்ச்சியாகப் பதவிக்கு வந்த அரசாங்கங்களும் சிறுபான்மை இனங்களின் உரிமைகளை நிராகரித்து பெரும்பான்மை சிங்கள இனத்திற்கு அதிகார பலத்தைப் பெற்றுக் கொடுத்தன.

தமிழர்களின் மீதான ஒடுக்குமுறை வேறொரு கட்டத்தை நோக்கி நகர்ந் திருந்தது. தேசிய ஒடுக்கு முறைக்கு எதிராக தமிழர்களின் மத்தியில் எழுந்த மிதவாதிகளின் கிளர்ச்சிக்கு அரசியல் ரீதியில் ஒரு அர்த்தமும் இல்லாது போன நிலையில் இது ஒரு அரசியல் வெற்றிடத்தினைத் தோற்றுவித்தது.

# துப்பாக்கிக் கலாசாரத்திலிருந்து மீள்வது எப்போது?



படிப்பகம்

www.padippakam.com

1970களின் பிற்பகுதியில் இந்த அரசியல் வெற்றிடத்தில் ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர்களின் பிரவேசம் நிகழ்ந்தது.இன்றைய அரசியல் நிலைமையின் முதல் சமிக்ஞையே இது.

சிங்களப் பெரும்பான்மை அரசிற்கு ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர்கள் அரசியல் பரிபாசையில் விடுத்த செய்தி பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் மத்தியில் தீவிர எதிரொலிகளைக் கிளப்பியது.

சிங்கள தேசத்தினதும் பௌத்தத்தினதும் பாதுகாவலனாகத் தன்னைப் பிரகடனப் படுத்திய அரசு ஆயுதமேந்திய தமிழர் கிளர்ச்சியை அழித்தொழிப்பதில் மூர்க்கமாக முனைந்தது. சகல இனவெறிப் பிற்போக்குச் சக்திகள் அனைத்தும் தமிழர்களுக்கு எதிரான அரசியல், தத்துவார்த்த சிந்தனை வெறியில் திளைத்தன. நவீனரக ஆயுத வசதிகளோடு வெற்றிகரமான ஒரு கெரில்லா யுத்தத்திற்கான பலம் மிக்க பின்தளத்தைத் தமிழகத்தில் கொண்டிருந்த ஆயுதந் தாங்கிய தமிழர் இயக்கத்தினை நிர்மூலமாக்கி அழித்தொழிப்பதே இப்போது தாரக மந்திரமாகியது. இந்த அரசியல் நெருக்கடி இலங்கையின் பிராந்திய எல்லையையும் மீறிச்செயற்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாக எங்கள் மண்ணில் நடந்து கொண்டிருக்கும் இந்த யுத்தம் எமது தேசத்தின் அரசியல் வாழ்க்கையையே முற்றுமுழுதாக இராணுவமயப்படுத்தியது.

தமிழ் மக்களுக்கு எதிரான இந்த யுத்தத்தை மகோன்னதப்படுத்தலே தென்னிலங்கை அரசியல் கலாசாரத்தின் ஜீவநாதமாகியது.

## ஜயபால திராணகம

அரசின் ஆதிக்கத்தில் இயங்கிய தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள் ஆகியவற்றுடன் சேர்ந்து எதிர்க்கட்சியாக இயங்கிய சிங்கள மேலாதிக்கக் கட்சிகளும் இதற்குச் சமமாகத் துணை போயின.இதன் விளைவு சிங்களத் தேசியவாதம் தீவிர வெறித் தனத்தில் முங்கி எழுந்தது.

கடந்த மூன்றாண்டு காலத்தில் இந்த அரசியல் நெருக்கடியின் அடிப்படைத் தன்மைகளில் கடுகளவேனும்



படிப்பகம்

www.padippakam.com

மாற்றங்கள் ஏற்படவில்லையாயினும் பல புதிய அம்சங்களை அது தனக்குள் சேர்த்துக் கொண்டிருக்கிறது.

அரசாங்கத்தின் ஆயுதப்படைகளுக்கும் ஜே.வி.பி. (ஜனதா விமுக்தி பெரமுன)அதன் இராணுவப் பிரிவான டி.ஜே.வி (தேசப்பிரேமி ஜனதா வியாபாரய) ஆகிய அமைப்புகளுக்கும் இடையிலான யுத்தமானது இரண்டு பக்கங்களிலுமிருந்து ஆயுதந் தாங்கிய குழுக்கள் திணித்த பயங்கரவாதம், வன்முறை, கொலைவெறி என்பனவற்றின் நேரடிப் பிரதிபலிப்புத்தான்.

இவை சாதாரண மக்களின் நாளாந்த நடவடிக்கைகள் அனைத்தையும் ஸ்தம்பிக்கச் செய்தன.கிளர்ச்சி என்பதனை நினைக்கக்கூடப் பார்க்க முடியவில்லை. விமர்சனம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

எக்காலப் பகுதியிலும் இல்லாதவாறு கிளர்ச்சியையும், விமர்சனத்தையும் முன்வைத்தோருக்கு மரணத் தீர்ப்பு மட்டுமே எதிர்முனையில் முன்னால் நின்றது.

இந்த அராஜக யுத்தங்கள் நாகரிக சமுதாயத்தின் நல் விழுமியங்கள் அனைத்தையும் தடயமே இல்லாமல் குழி தோண்டிப் புதைத்தன.

## நெருக்கடிக்குள் அரசு

இலங்கையின் அரசியல் நெருக்கடி இன்று அரசின் நெருக்கடி ஆகிவிட்டிருக்கின்ற இந் நிலையில் தென்னாசியப் பிராந்திய நாடுகளும், பிற மூன்றாம் உலகநாடுகளும் கற்றுக்கொள்ளவேண்டிய பல முக்கிய பாடங்களை இலங்கை இன்று தன்னகத்தே கொண்டிருக்கிறது.

இனரீதியிலான வேறுபாடுகள் கொண்ட பல் இனச் சமூகங்களில் ஒற்றையாட்சி அமைப்பொன்றினைப் பலவந்தமாகத் திணிப்பதால் ஏற்படக்கூடிய அரசியல் விளைவுகள் எத்தகையதாய் அமையும் என்பதைப் பற்றிய பாடமே அது.

இத்தகைய அரசுகளில் ஜே.வி.பி/டி.ஜே.வி போன்ற அமைப்புகள் செழித்து வளர்வதற்கான சாத்தியங்கள் நிறையவேயுள்ளன.இவை சமூக வளர்ச்சியின் மீதும்,புரட்சிகர சமூக மாற்றத்தின் மீதும் மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தவல்லன.



படிப்பகம்

www.padippakam.com

முதலாளித்துவத்திற்கு முன்னைய காலகட்ட குணாம்சங்கள் கொண்ட சமூக உருவாக்கத்தில் நிலபிரபுத்துவ கருத்தாக்கங்கள் நிலவுவதே இத்தகைய அரசியல் நிலைமைகள் வேரூன்றுவதற்கான தத்துவார்த்த தளமாக அமைகின்றன. இத்தகைய நிலைமைகளில் எந்த இனவாரி சமூகமும் 'கலாசார அடிப்படைவாதத்தினை' நோக்கிய - அது எத்தகைய மோசமான வன்முறை வடிவங்களைக் கொண்டிருந்தாலும் கூட - ஒரு புத்தெழுச்சியை நாடி நிற்பது இயல்பாகும். இத்தகைய தூய - தனித்துவ - பழமை தழுவிய கலாசாரவாதத்தினை நோக்கிய புத்தெழுச்சி பிற இனவாரி சமூகங்களையும் அத்தகைய வாதத்தினை மேற்கொள்ளத் தூண்டும்.

இலங்கையின் மூன்றாவது பெரிய இனவாரி சமூகமான முஸ்லீம் சமூகத்தினர் சிங்கள,

தமிழ் சமூகங்களால் தமது தனித்துவங்களும், உரிமைகளும் புறக்கணிக்கப்பட்டுவிடும் என்ற அச்சம் காரணமாக, அரசியல் ரீதியாக தாம் நிலைபெற வேண்டுமெனில் தீவிர இஸ்லாமிய அடிப்படைவாதத்தினை விட்டால் வேறு வழி இல்லையென்று அதிலேயே தஞ்சம் புகுந்துள்ளனர்.

இலங்கையின் இன்றைய பின்னணியில் இதன் அர்த்தம் யாதெனில் ஒவ்வொரு இனவாரி சமூகமும் ஆயுதபாணியாகித் தயார் நிலையில் இருக்கிறது என்பதுதான்.

இலங்கை போன்ற பல் இனச் சமூகங்களைக் கொண்ட ஒரு தேசத்தில் ஒவ்வொரு சமூகமுமே ஆயுதப் போராட்டத்தின் அதியுச்ச வன்முறை வடிவங்களின் பலத்துடன் தமது அரசியற் கோரிக்கைகளை முன் வைக்க ஆரம்பிக்கிறது.

இவ்வாறு அதி தீவிர தேசியவாதமும், பெரும்பான்மைச் சிங்களச் சமூகத்தில் ஜே.வி.பி., தமிழ்ச் சமூகத்திலிருந்து எல்.ரி.ரி.ஈ. போன்ற ஆயுதக் குழுக்களுமே இன்றைய இலங்கை நெருக்கடியின் மத்தியஸ்தர்களாகத் தோற்றம் தருகின்றன.

பெரும்பான்மைச் சமூகத்தின் சிங்கள மேலாதிக்க வாதத்திற்கு எப்போதுமே துணைபோகும் பூர்சுவா அரசும் இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்குள்ள ஒரே ஒரு வழி இராணுவத் தீர்வுதான் என்று கருதுகிறது. இவ்வாறு கருதிக்கொண்டு தீவிர சிங்களவாத ஜே.வி.பி. போன்ற குழுக்களையும் தாக்கத் தொடங்கும்போது நிலைமை



படிப்பகம்

www.padippakam.com

மேலும் சிக்கலாகி விடுகிறது. ஏனையவான ஆய்வுகளும், தீர்வுகளும் இந் நிலையில் சாத்தியமற்றுப் போய்விடுகின்றன.

இராணுவமயமாக்கலிலிருந்து மீள்வோம் என்ற கோஷத்தின் அரசியல், தார்மீக நியாயத்தை விளங்கிக்கொள்வதற்கு இந்த நிலைமையின் சிக்கலான குணாம்சங்களை விளங்கிக்கொள்வது முதலில் அவசியமானதாகும்.

இன்றைய இந்த நெருக்கடியின் பயங்கர வன்முறை வடிவிலான குழறல் 1983இற்கு நம்மை இட்டுச் செல்கிறது. இந்த ஆண்டில்தான் பெரும்பான்மைச் சிங்களச் சமூகத்தின் தீவிர இனவாதச் சக்திகள் தமிழருக்கு எதிரான கோர வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டிருந்தன. இன்றைய இந்த நெருக்கடிக்குக் காரணமான சக்திகள் தமது உண்மையான சொரூபத்தை அப்பட்டமாகக் காட்டி அழிவு நடவடிக்கைகளில் இறங்கின.

1983இன் இனக் கலவரங்களுக்குப் பிறகு ஆயுதந் தாங்கிய தமிழர் இயக்கங்கள் ஆயிரக்கணக்கில் குவிந்த இளைஞர்களுடன் எண்ணிக்கையில் பல்கிப் பெருகின. இதே நேரத்தில் யு.என்.பி. அரசு தமிழருக்கெதிரான சகல அடக்குமுறைகளையும் கட்டவிழ்த்துவிட்டது. இவ்வாறு 'தமிழர் விரோத தத்துவார்த்த அரசியல் வெறித்திரைக்குள் = தடுப்பிற்குள்'1 தனது ஆதிபத்திய நிலையைத் தக்க வைத்துக் கொண்டது.

இத்தகைய காட்டுமிராண்டித்தனமான =குரூரமான= ஒடுக்குமுறைபோல முன்னை நாம் சரித்திரத்தில் இதற்கு முன்னர் எங்கும் கண்டதில்லை. தமிழ்ச் சமூகத்தின் சகல பிரிவினர் மத்தியிலும் இது பயங்கர அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த தமிழர் விரோத அரசியல் அணி சிறீலங்கா சுதந்திரக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன, ஜே.வி.பி. போன்ற கட்சிகளைக் கொண்டிருந்தது. இந்தக் கட்சிகளுக்கிடையே தந்திரோபாய ரீதியில் சிற்சில வேறுபாடுகள் காணப்பட்டன என்பதைத் தவிர இவற்றிற்கிடையே பெரிய வித்தியாசம் எதுவுமில்லை.

---

1= கட்டுரையாளர் கூறும் 'anti-Tamil ideological and political block' என்பதன் [illegible]



படிப்பகம்

www.padippakam.com




தமிழ் மக்களுக்கு எதிரான துவம்ச யுத்தம் ஒன்றை யு.என்.பி. அரசு நடத்திக் கொண்டிருந்த அதேவேளையில் இந்த தமிழ் விரோத அணியினைச் சார்ந்தவர்களோ தமிழ் தீவிரவாத இயக்கத்தை வெற்றிகரமாக அழித்தொழிக்க அரசு திராணியற்றுப் போயிருக்கிறதென்று கண்டித்துக் கொண்டிருந்தனர்.

இந்தத் தமிழ் விரோத அணியின் தலைமையை யார் சுவீகரிப்பது என்பதற்கான போட்டா போட்டிகள் ஆரம்பமாகிவிட்டன என்பது தெளிவாக இருந்தது.

## தவறான நியாயிப்புகள்

இந்தக் காலகட்டத்தில் தீவிர சிங்கள தேசியவாதத்தின் அச்சொட்டான வெளிப்பாடாய் ஜே.வி.பி/டி.ஜே.வி அமைப்பு பரந்த இயக்கமாக வளர்ச்சியடைந்துகொண்டிருந்தது. இதனை ஒற்றைத் தனியான வளர்ச்சியாகவோ, சுத்தசுயம்புவான வளர்ச்சியாகவோ நோக்க முடியாது.

ஜே.வி.பி.யின் அரசியல் தோற்றப்பாட்டிற்கு போலி நியாயர்த்தம் கற்பிக்கக்கூடிய முக்கிய பல துணைக் காரணிகள் இருக்கவே செய்கின்றன.

முதலாவதாக, இக் காலகட்டத்தில் பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் தொழிலாளர் வர்க்கம் உள்ளிட்ட சகல சமூகப் பிரிவினருமே சிங்கள - பௌத்த கருத்தாக்கத்திற்கு இரையாகிப் போயிருந்தனர். தமிழருக்கு எதிரான இனவாத வெறுப்பைக்கொண்ட சிங்கள - பௌத்த கருத்தாக்கத்தின் நீண்ட பாரம்பரியமானது தனது இனமேலாதிக்கவாத வடிவங்களைப் புனரமைத்துக்கொள்ளும் வகையில் 1983ஐ அடுத்த காலப் பகுதியில் சுத்த இராணுவ மயமாக்கத்திற்கு



படிப்பகம்

www.padippakam.com

இடங் கொடுத்தது. தத்துவார்த்த, அரசியல் வெறி இதனைப் பேணிவளர்த்தது. அரசயந்திரமும் பூர்சுவா கருத்தாக்கம் என்ற மெல்லிய படுதாவில் வைத்து இக் கருத்தாக்கத்திற்கு வர்ணப் பூச்சு இட்டிருந்தது.

பாரம்பரிய இடதுசாரிக்கட்சிகளும் பாராளுமன்ற வலைப் பின்னலுக்குள் சிக்கிக்கொண்டு பெரும்பான்மை சிங்கள இனத்தின் அரசியல் ஆதரவை நாடி,சிங்கள – பௌத்த கருத்தாக்கத்திற்கு எதிரான

தமது கோட்பாட்டு ரீதியிலான போராட்டத்தைப் பூரணமாகக் கைவிட்டுவிட்டனர். உண்மையைச் சொல்லப்போனால், தமிழர்களின் ஜனநாயக உரிமைக்காக ஒரு காலத்தில் மகோன்னதமான போராட்டத்தில் எல்லாம் ஈடுபட்ட இடதுசாரிகள் தற்போது அதனைக் கைவிட்டுவிட்டதுமல்லாமல் சிங்கள – பௌத்த கருத்தாக்கத்திற்கு இசைவாக கோட்பாட்டு ரீதியில் சில விட்டுக்கொடல்களைச் செய்யவும் முன்வந்தார்கள்.

இரண்டாவதாக, இலங்கை சமூகத்தின் இடைத்தட்டு வர்க்கத்தின் அபிலாசைகளையும், புரட்சிகர சமூக மாற்றத்தில் அவர்களுக்கிருந்த விருப்புணர்வையும் இடதுசாரிக் கட்சிகள் விளங்கிக்கொள்ளவில்லை.

இந்த நிலைமை ஜே.வி.பி./டி.ஜே.வி. கட்சி பெருவாரியான இளைஞர்களைத் தமது பக்கம் இலகுவாக வென்றெடுத்துக் கொள்ளப் பெரிதும் உதவியது. இது ஜே.வி.பி.க்கான முக்கிய சமூகத் தளத்தை அமைத்துக் கொடுத்தது. குறிக்கப்பட்ட விசேட அரசியல் கால இணைவில் கிராமிய இளைஞர்களின் தளமே இது. சிங்கள – பௌத்த கருத்தாக்கத்திற்கு சடுதியாக இரையாகிவிடக்கூடிய கிராமிய இளைஞர்களே அவர்கள்.

இதனைவிட புரட்சிகர சமூக மாற்றத்திற்கு ஜே.வி.பி. தந்த ஆயுதப் போராட்டம் பற்றிய விளக்கம் அரசியல் ரீதியில் முழுப் பிழையானது என்றால் இடதுசாரிகளிடமோ இதற்கு மாற்றாக வைக்கத்தக்க எந்தக் கோட்பாடுமே கைவசம் இருக்கவில்லை.

மூன்றாவதாக, பல்வேறு காரணங்களால் அரசு மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை வேகமாக இழந்து கொண்டிருந்தது. தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தால் மக்கள்



படிப்பகம்

www.padippakam.com

மீதான சுமை வெகுவாய் அதிகரித்தது. வறுமையும், பட்டினியும், போசாக்கின்மையும், வேலையில்லாத் திண்டாட்டமும் முன்னென்றும் இல்லாதவாறு அதிகரிக்க ஆரம்பித்திருந்தன.

இதே நேரத்தில் சமூக நலவாய அரசு என்பதனைப் படிப்படியாகச் சிதைக்கும் கைங்கரியத்தை யு.என்.பி. பூரணமாக நடத்தி முடித்து விட்டது. சுகாதாரத்தையும், கல்வியையும் தனியார் மயப்படுத்த முனைந்ததன் மூலம் அது மக்கள் மீது பெரும் பளுவைச் சுமத்தியது. அடிப்படையில் இந்த அரசு ஜனநாயக விரோத அரசாக மாறியது. திட்டவட்டமாகத் தாங்கள் தோற்கப் போகும் ஒரு யுத்தத்தை அது நிர்த் தாட்சண்யமாகக் கொண்டு நடத்தியது.

நான்காவதாக, 1987ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையடுத்தும். வடகிழக்கில் இந்திய இராணுவம் வந்திறங்கியதையடுத்தும் நிகழ்ந்த பரபரப்பூட்டும் நிகழ்ச்சிகள் தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தை முற்றுக்குக் கொண்டுவர இலங்கையை நிர்ப்பந்தித்தன.

இந்தக் கட்டத்தில் நாம் மேலே குறிப்பிட்ட தீவிர தத்துவார்த்த, அரசியல் வெறி அணியின் தலைமைப் பாத்தி ரத்தை அரசு இழந்துவிட்டது.

சிங்கள மேலாதிக்க வாதிகளின் கண்ணோட்டத்தில், 'இந்திய ஆக்கிரமிப்பிற்கு' வழி சமைத்ததின் மூலமும், வட, கிழக்குப் பகுதிகளைத் தமிழர்களுக்குத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டதன் மூலமும் அரசு தான் பிரதான குற்ற வாளியாகக் காணப்பட்டது.

இந்திய எதிர்ப்பு உணர்ச்சி அலையிலிருந்து எழுந்த 'தேசபக்த வாதம்' எனும் புதிய வெளிப்பாடு ஜே.வி.பி.க்கு பலம் வாய்ந்த அரசியல் ஆயுதமாகியது. ஜே.வி.பி.யின் காலம் இப்போது கனிந்துவிட்டிருந்தது.

இந்தியத் துருப்புகளை இந்தியாவுக்குத் திருப்பியனுப்பத் தக்க பலம் மிகுந்த ஒரு அரசாங்கத்தை அமைக்க ஜே.வி.பி. இப்போது அறை கூவியது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபைகளைக் கலைக்குமாறும் இவர்கள் கோரிக்கை வைத்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழர்களுக்கு அதிகாரப் பரவலாக்கத்தை வழங்கும் நோக்கில் இந்தச் சபைகள் அமைக்கப்பட்டாலும் உண்மையில் தமிழர்களுக்குப் பெரிதாக எதையும் இவை வழங்கிவிடவில்லை.

ஆனால் ஜே.வி.பி./ டி.ஜே.வி.யும், பிற சிங்கள மேலாதிக்கவாத சக்திகளும் தமிழர்கள் கோரும் தனிநாடு என்றும், தமிழ் ஈழத்தை அமைப்பதற்கான முதற்படியே இது என்றும் குற்றம் சுமத்தின. இதனால் சிங்கள இனத்திற்கு யு.என்.பி. பெருந் துரோகம் இழைத்ததாகக் குற்றம் கூறப்பட்டது. இந்தக் கைப்பொம்மை அரசைத் தூக்கி எறிய வேண்டும் என்பதே அப்போதைய பிரதானமான அரசியல் கோசமானது.




(பல்கலைக் கழகங்களிலிருந்து பொலிஸை

www.padippakam.com

மீதான சுமை வெகுவாய் அதிகரித்தது. வறுமையும், பட்டினியும், போசாக்கின்மையும், வேலையில்லாத் திண்டாட்டமும் முன்னென்றும் இல்லாதவாறு அதிகரிக்க ஆரம்பித்திருந்தன.

இதே நேரத்தில் சமூக நலவாய அரசு என்பதனைப் படிப்படியாகச் சிதைக்கும் கைங்கரியத்தை யு.என்.பி. பூரணமாக நடத்தி முடித்து விட்டது. சுகாதாரத்தையும், கல்வியையும் தனியார் மயப்படுத்த முனைந்ததன் மூலம் அது மக்கள் மீது பெரும் பளுவைச் சுமத்தியது. அடிப்படையில் இந்த அரசு ஜனநாயக விரோத அரசாக மாறியது. திட்டவட்டமாகத் தாங்கள் தோற்கப் போகும் ஒரு யுத்தத்தை அது நிர்த் தாட்சண்யமாகக் கொண்டு நடத்தியது.

நான்காவதாக, 1987ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையடுத்தும். வடகிழக்கில் இந்திய இராணுவம் வந்திறங்கியதையடுத்தும் நிகழ்ந்த பரபரப்பூட்டும் நிகழ்ச்சிகள் தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தை முற்றுக்குக் கொண்டுவர இலங்கையை நிர்ப்பந்தித்தன.

இந்தக் கட்டத்தில் நாம் மேலே குறிப்பிட்ட தீவிர தத்துவார்த்த, அரசியல் வெறி அணியின் தலைமைப் பாத்திரத்தை அரசு இழந்துவிட்டது.

சிங்கள மேலாதிக்க வாதிகளின் கண்ணோட்டத்தில், ‘இந்திய ஆக்கிரமிப்பிற்கு’ வழி சமைத்ததின் மூலமும், வட, கிழக்குப் பகுதிகளைத் தமிழர்களுக்குத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டதன் மூலமும் அரசு தான் பிரதான குற்றவாளியாகக் காணப்பட்டது.

இந்திய எதிர்ப்பு உணர்ச்சி அலையிலிருந்து எழுந்த ‘தேசபக்த வாதம்’ எனும் புதிய வெளிப்பாடு ஜே.வி.பி.க்கு பலம் வாய்ந்த அரசியல் ஆயுதமாகியது. ஜே.வி.பி.யின் காலம் இப்போது கனிந்துவிட்டிருந்தது.

இந்தியத் துருப்புகளை இந்தியாவுக்குத் திருப்பியனுப்பத் தக்க பலம் மிகுந்த ஒரு அரசாங்கத்தை அமைக்க ஜே.வி.பி. இப்போது அறை கூவியது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபைகளைக் கலைக்குமாறும் இவர்கள் கோரிக்கை வைத்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழர்களுக்கு அதிகாரப் பரவலாக்கத்தை வழங்கும் நோக்கில் இந்தச் சபைகள் அமைக்கப்பட்டாலும் உண்மையில் தமிழர்களுக்குப் பெரிதாக எதையும் இவை வழங்கிவிடவில்லை.

ஆனால் ஜே.வி.பி./டி.ஜே.வி.யும், பிற சிங்கள மேலாதிக்கவாத சக்திகளும் தமிழர்கள் கோரும் தனிநாடு என்றும், தமிழ் ஈழத்தை அமைப்பதற்கான முதற்படியே இது என்றும் குற்றம் சுமத்தின. இதனால் சிங்கள இனத்திற்கு யு.என்.பி. பெருந் துரோகம் இழைத்ததாகக் குற்றம் கூறப்பட்டது. இந்தக் கைப்பொம்மை அரசைத் தூக்கி எறிய வேண்டும் என்பதே அப்போதைய பிரதானமான அரசியல் கோசமானது.




(பல்கலைக்கழகங்களிலிருந்து பொலிஸை வெளியேற்றும்படி கோஷங்களை மாணவர் அமைப்புகள் போராடின)

www.padippakam.com

# துப்பாக்கிக் கலாசாரத்திலிருந்து மீள்வதெப்போது?

## கிளர்ச்சியும் வன்முறையும்

ஆயிரத்தித் தொள்ளாயிரத்து ண்பத்தேழிலிருந்து ஜே.வி.பி/டி.ஜே.வி பிரக்கமில்லாத ஆயுத நடவடிக்கைகளில் றங்க ஆரம்பித்து விட்டது. இவர்களின் லக்கு ஆட்சியிலிருந்த 'பொம்மை ரசை' மட்டுமே குறித்து மையவில்லை.

பெரும்பான்மை சிங்கள க்கள் மத்தியிலிருந்து தமிழர்களின் பநிர்ணய உரிமையை ஆதரித்து ன்றவர்களையும், இனப்பிரச்சனைக்கு ரசியல் தீர்வாக தமிழர்களுக்கு திகாரப் பரவலாக்கத்தை வழங்க வண்டும் என்று வுந்தவர்களையும் வர்கள் கொடூரமாகக் கொலை செய்தனர். பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளில் தீவிரமாக இயங்கியவர்களையும் புதிய இடதுசாரிகள் குழுவினரையும் ஜே.வி.பி யினர் இவ்வாறு கொன்று தீர்த்தனர். ஜே.வி.பி தனது ஆயுத நடவடிக்கையின் ஆரம்ப கட்டத்தில் அரசின் பாதுகாப்புப் படையின் கீழ்மட்டத்தைச் சேர்ந்த இராணுவ வீரர்களின் அநுதாபத்தைத் தம்பக்கம் ஈர்த்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது.ஜே.வி.பி தோற்றம் பெற்ற அதே சமூகத்தளத்தைச் சேர்ந்தவர்களாக இவர்களும் இருந்ததால் இது லேசானதாக இருந்தது. அத்துடன் ஜே.வி.பி யின் தீவிரவாதத்தை நெறிப்படுத்திய சிங்கள பௌத்த தத்துவார்த்த சிந்தனைக்கு இவர்கள் எளிதில் வசமாகினர்.



படிப்பகம்

www.padippakam.com

சிங்கள தேசியவாதத்தை ஒரு அரசியல் ஆயுதமாகப் பாவித்து இந்த பூர்சுவா அரசைத் தூக்கி எறியத்தக்க தெட்டத் தெளிவான- தந்திரோபாயக் கொள்கையைத் தாங்கள் கொண்டிருப்பதாக ஜே.வி.பி/டி.ஜே.வி கூறிக்கொண்டது. இடதுசாரிகளைக் கடுமையாகத் தாக்கி- சோசலிச,ஜனநாய சக்திகளுக்கும் தங்களுக்கும் இடையில் அவர்கள் இரத்தத்தால் கோடு கீறினர். இப் போக்கு பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகள் செல்வாக்குப் பெற்றிருந்த தொழிலாளர் வர்க்கத்தின் ஸ்தாபனமயப்பட்ட விழிப்புணர்வு கொண்ட ஒரு பகுதியிடமிருந்து ஜே.வி.பியை மேலும் மேலும் அந்நியப்படுத்திவிட்டது.

அரசாங்கத்திற்கு ஆதரவாக இருந்து செயற்பட்டவர்களை இவர்கள் தொடர்ச்சியாகக் கொலை செய்து கொண்டிருந்த நேரத்தில் அரசாங்கத்தின் கொலைப்படைக் குழுக்களும் செயற்பட ஆரம்பித்திருந்தது. ஜே.வி.பி/டி.ஜே.வியினர் தமது அரசியற் கொள்கையை ஏற்றுக் கொள்ளாத தொழிற் சங்கங்கள்,இடதுசாரிக் கட்சிகள் உள்ளிட்ட சகல அரசியற் கட்சிகள்,அவர்களது பத்திரிகை அனைத்திற்கும் தடைவிதித்தார்க மனிதஉரிமைகள் இயக்கம்,சமூ நிவாரணசேவை ஸ்தாபனங்களைக் கூ இவர்கள் விட்டுவைக்கவில்லை.இ அமைப்புக்களைச் சேர்ந்த அனை மீதும் இவர்கள் கொலை மிரட்டல்கள மேற்கொண்டதுடன் அவற்றை நடைமுறைப்படுத்தவும் ஆரம்பித் விட்டனர். அவர்களுடைய அரசிய



கொள்கையோடு ஒத்துப் போகக்கூடி சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மகாஜ எக்சத் பெரமுன போன்ற கட்சிகளை கூட அவை 1988 டிசம்ப பொதுதேர்தலில் பங்குபற்ற தீர்மானித்திருந்தன என்ற காரணத்தா "துரோகிகள்" என்று ஜே.வி.பி யின முத்திரை குத்தினார்கள். இக்கட்சிகளின் தேர்தல் வேட்பாளர்களு அவர்களுக்காக உழைத்த கட்சி அங்கத்தவர்களும் கொலை செய்யப் பட்டனர். இந்த நிலைமைகள் ஜே.வி.பி யை முன்னென்றும் இல்லாத மாதிரி அரசியல் ரீதியில் தனிமைப் படுத்துவதில் போய் முடிந்தது. இவர்கள் விசேசமாக கிராமப் புறங்களில் வேலை நிறுத்தங்களை ஆரம்பிப்பதிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதிலும்



படிப்பகம்

www.padippakam.com

# துப்பாக்கிக் கலாசாரத்திலிருந்து மீள்வதெப்போது?

## கிளர்ச்சியும் வன்முறையும்

ஆயிரத்தித் தொள்ளாயிரத்து ண்பத்தேழிலிருந்து ஜே.வி.பி/டி.ஜே.வி ிரக்கமில்லாத ஆயுத நடவடிக்கைகளில் றங்க ஆரம்பித்து விட்டது. இவர்களின் லக்கு ஆட்சியிலிருந்த 'பொம்மை ரசை' மட்டுமே குறித்து மையவில்லை.

பெரும்பான்மை சிங்கள க்கள் மத்தியிலிருந்து தமிழர்களின் பநிர்ணய உரிமையை ஆதரித்து ன்றவர்களையும், இனப்பிரச்சனைக்கு ரசியல் தீர்வாக தமிழர்களுக்கு திகாரப் பரவலாக்கத்தை வழங்க வண்டும் என்று வுந்தவர்களையும் வர்கள் கொடூரமாகக் கொலை செய்தனர். பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளில் தீவிரமாக இயங்கியவர்களையும் புதிய இடதுசாரிகள் குழுவினரையும் ஜே.வி.பி யினர் இவ்வாறு கொன்று தீர்த்தனர். ஜே.வி.பி தனது ஆயுத நடவடிக்கையின் ஆரம்ப கட்டத்தில் அரசின் பாதுகாப்புப் படையின் கீழ்மட்டத்தைச் சேர்ந்த இராணுவ வீரர்களின் அநுதாபத்தைத் தம்பக்கம் ஈர்த்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது.ஜே.வி.பி தோற்றம் பெற்ற அதே சமூகத்தளத்தைச் சேர்ந்தவர்களாக இவர்களும் இருந்ததால் இது லேசானதாக இருந்தது. அத்துடன் ஜே.வி.பி யின் தீவிரவாதத்தை நெறிப்படுத்திய சிங்கள பௌத்த தத்துவார்த்த சிந்தனைக்கு இவர்கள் எளிதில் வசமாகினர்.



படிப்பகம்

www.padippakam.com

சிங்கள தேசியவாதத்தை ஒரு அரசியல் ஆயுதமாகப் பாவித்து இந்த பூர்சுவா அரசைத் தூக்கி எறியத்தக்க தெட்டத் தெளிவான-தந்திரோபாயக் கொள்கையைத் தாங்கள் கொண்டிருப்பதாக ஜே.வி.பி/டி.ஜே.வி கூறிக்கொண்டது. இடதுசாரிகளைக் கடுமையாகத் தாக்கி- சோசலிச,ஜனநாய சக்திகளுக்கும் தங்களுக்கும் இடையில் அவர்கள் இரத்தத்தால் கோடு கீறினர். இப் போக்கு பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகள் செல்வாக்குப் பெற்றிருந்த தொழிலாளர் வர்க்கத்தின் ஸ்தாபனமயப்பட்ட விழிப்புணர்வு கொண்ட ஒரு பகுதியிடமிருந்து ஜே.வி.பியை மேலும் மேலும் அந்நியப்படுத்திவிட்டது.

அரசாங்கத்திற்கு ஆதரவாக இருந்து செயற்பட்டவர்களை இவர்கள் தொடர்ச்சியாகக் கொலை செய்து கொண்டிருந்த நேரத்தில் அரசாங்கத்தின் கொலைப்படைக் குழுக்களும் செயற்பட ஆரம்பித்திருந்தது. ஜே.வி.பி/டி.ஜே.வியினர் தமது அரசியற் கொள்கையை ஏற்றுக் கொள்ளாத தொழிற் சங்கங்கள்,இடதுசாரிக் கட்சிகள் உள்ளிட்ட சகல அரசியற் கட்சிகள்,அவர்களது பத்திரி அனைத்திற்கும் தடைவிதித்தார்க மனிதஉரிமைகள் இயக்கம்,ச நிவாரணசேவை ஸ்தாபனங்களைக் க இவர்கள் விட்டுவைக்கவில்லை.இ அமைப்புக்களைச் சேர்ந்த அனை மீதும் இவர்கள் கொலை மிரட்டல்க மேற்கொண்டதுடன் அவற் நடைமுறைப்படுத்தவும் ஆரம்பித் விட்டனர். அவர்களுடைய அரசிய

*தயபால திராணகம*

கொள்கையோடு ஒத்துப் போகக்கூடி சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மகாஜ எக்சத் பெரமுன போன்ற கட்சிகளை கூட அவை 1988 டிசம்ப பொதுதேர்தலில் பங்குபற்ற தீர்மானித்திருந்தன என்ற காரணத்தா "துரோகிகள்" என்று ஜே.வி.பி யின முத்திரை குத்தினார்கள். இக்கட்சிகளி தேர்தல் வேட்பாளர்களு அவர்களுக்காக உழைத்த கட்சி அங்கத்தவர்களும் கொலை செய்ய பட்டனர். இந்த நிலைமைகள் ஜே.வி.பி யை முன்னென்றும் இல்லாத மாதிரி அரசியல் ரீதியில் தனிமைப் படுத்துவதில் போய் முடிந்தது. இவர்கள் விசேசமாக கிராமப் புறங்களில் வேலை நிறுத்தங்களை ஆரம்பிப்பதிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதிலும்



படிப்பகம்

www.padippakam.com




இப்போது இறங்க ஆரம்பித்தனர். கடந்த ஆண்டின் (1989) நடுப்பகுதியில் தாம் நிர்ப்பந்தித்த வேலை நிறுத்தங்களில் பங்கு கொள்ளாதவர்களையும் தாம் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளாதவர்களையும் இவர்கள் கொலை செய்து விட்டனர்.

ஜே.வி.பியினர் அறிவித்த பொது வேலை நிறுத்தத்தில் பங்குபற்றவில்லை என்ற காரணத்திற்காக மட்டும் 250க்கு மேற்பட்ட பாடசாலை ஆசிரியர்களும் 200 பஸ் சாரதிகளும் சர்வ சாதாரணமாக சுட்டுக் கொல்லப்பட்டனர். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் "ரூபவாகினி" தொலைக் காட்சி நிலையத்தை இயங்கக்கூடாதென்று தாங்கள் தடைவிதித்து விட்ட பிறகும் அங்கு பணியாற்றினார்கள் என்ற காரணத்தால் திறமை வாய்ந்த தொலைக் காட்சி கலைஞர்கள் கொலை செய்யப்பட்டனர். ஜே.வி.பியின் இந்த மரண தண்டனைகளும் கொலை மிரட்டல்களும் ஜனங்கள் மத்தியில் பயங்கரமான அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியது. இவர்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்துவிடக்கூடிய சாத்தியமும் உள்ளது



படிப்பகம்

www.padippakam.com

போல் இருந்ததால் மக்களும் பயந்து இவர்களுடைய கட்டளைகளுக்குப் பணிந்து நடக்க ஆரம்பித்தனர்.

ஜே.வி.பி.பொது மக்களைப் பற்றி கொண்டிருந்த கருத்து ஹிட்லர் ஜெர்மானிய மக்களைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தைத்தான் நினைவுக்கு கொண்டு வருகிறது. தான் விடுக்கும் கட்டளைகளுக்குப் பணிந்து நடக்க மட்டுமே லாயக்கான செம்மறியாட்டுக் கூட்டமாகவே ஹிட்லர் மக்களைக் கருதினான். இந்நிலையில் ஜே.வி.பி/ டி.ஜே.வி. யால் தடைவிதிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், மற்றும் அமைப்புக்கள், தனிநபர்களும் கூடத் தமது சுய பாதுகாப்புக் கருதி ஆயுதபாணிகளாக நேர்ந்தது.

ஜே.வி.பி/டி.ஜே.வி யினரை பாதுகாப்புப் படைகளாலும் அழித் தொழிக்க முடியாத நிலையில் அரசாங்கமோ ஒன்றும் செய்து கொள்ள முடியாத நிலையில் இருந்தது. 1989 யூலை மாதத்தில் அரசின் இராணுவப் படையைச் சார்ந்த அனைவரும் அந்த மாதக் கடைசிக்குள் தமது பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு வெளியேற வேண்டும் என்று ஜே.வி.பி காலக் கெடுவிதித்தது. அவர்கள் அவ்வாறு தங்கள் பதவிகளை ராஜினாமா செய்யவில்லை என்றால் அவர்களது குடும்பத்தவர்கள் படுகொலை செய்யப்படுவார்கள் என்றும் அவர்கள் அறிவித்தனர்.

இந்த அறிவித்தலுக்கு இராணுவப் படையினர் செவிசாய்க்காது போனதும் ஜே.வி.பி யினர் தாம் விடுத்திருந்த கொலை மிரட்டல் பிரகாரம் இந்த இராணுவப் படை வீரர்களின் குடும்பத்தினர், உறவுக்காரர்களைப் பெருமளவில் கொலை செய்ய ஆரம்பித்து விட்டனர்.

ஜே.வி.பி யின் இந்த கொலை பாதகச் செயல்களால் கொதிப்புற்ற ஆயுதப்படையின் சகல மட்டங்களைச் சேர்ந்தவர்களும் இந்தப் படுகொலைகளுக்கு மூர்க்கமாகப் பழிவாங்க ஆரம்பித்தனர்.

ஜே.வி.பி/ டி.ஜே.வி யின் உறுப்பினர்கள், ஆதரவாளர்களைக் கொலை செய்யும் படலம் இப்போது ஆரம்பித்து விட்டது. ஜே.வி.பி யினரின் சடலங்கள் வீதியோரங்களில் வீசப்பட்டுக் கிடப்பதும் ஆற்றில் மிதந்து செல்வதும் நாளாந்தம் நடை பெறும்



படிப்பகம்

www.padippakam.com

நிகழ்ச்சிகளாகி விட்டன: இது இன்றும் எந்த தடங்கலும் இல்லாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது: இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு யு:என்:பி அரசு தீவிர இராணுவ ரீதியிலான அணுகுமுறையை கைக்கொண்டது:ஜே:வி:பி /டி:ஜே:வி போன்ற ஒரு அரசியல் அமைப்பு உருப் பெற்றதற்கான புறநிலை அரசியற் காரணங்களை அரசு விளங்கிக் கொள்ளவில்லை: கடந்த ஆண்டின் இறுதியில் ஜே:வி:பி தலைவர் ரோகண விஜயவீர உட்பட மேல்மட்ட தலைமைப் பீடம் முழுவதையுமே ஆயுதப் படையினர் அழித்து விட்டனர்:

## அரசின் கொலைப் படை:

இப்போது அரசாங்கத்தின் கொலைக் குண்டர் படையினர் மற்ற எதிர் தரப்பு அரசியற் கட்சிகளின் மீது தமது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்து விட்டனர்: இடது சாரிகள் உட்பட அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படும் அரசியற் கட்சிகளைச் சார்ந்த ஆதரவாளர்களையும் கொலை செய்த சம்பவங்களும் இடம் பெற ஆரம்பித்து விட்டன:

இலங்கையின் முழுச் சமூக அமைப்பையும் வன்முறையும் மரணமும் அச்சுறுத்தியது: சுயமாகமக்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும் உரிமையை ஆயுதக் குழுக்கள் எல்லாப் பக்கத்திலுமே இல்லாமல் செய்து விட்டன:

ஜே:வி:பி /டி:ஜே:வி:பி மேற் கொண்ட ஆயுத நடவடிக்கைகளின் ஜனநாயக விரோத பாசிஸ போக்கானது அரச ஆயுதப் படையினர் தமது கொலைகளை சரியென்று நியாயப்படுத்திக் கொள்ள வசதி செய்து கொடுத்தது: உண்மையில் அரச ஆயுத முனையில் நடத்திய அட்டூழியங்களுக்கு ஜே:வி:பி யின் போக்கு அரசியல் நியாய அந்தஸ்தைத் தேடிக் கொடுத்தது:

ஜே:வி:பி/டி:ஜே:வி யின் இராணுவ வலிமையை நசுக்கியதும் அரசாங்கத்தின் ஆயுதப்படையினர் தமது வழமையான ஆதிக்க எல்லைகளுக்கு அப்பாலும் தமது வலிமையை விஸ்தரித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டனர்: இது இப்போது தலையாய அரசியல் காரணியாக மாறிக் கொண்டு வருகிறது: இந்த அச்சுறுத்தும் நிலைமையே அடுத்த சில தசாப்தங்களில் இலங்கை மக்களின்



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் விதியைத் தீர்மானிப்பதாக அமையப்போகிறது. மேலும் ஜே.வி.பி/டி.ஜே.வி.பி யினர் முன்வைத்த அரசியல் கோரிக்கைகளும் மாகாண சபைகளை நீக்குமாறும் தமிழ் மக்களுக்கு அதிகார பரவலாக்கம் வழங்கப்படுவதை எதிர்த்தும் செயற்பட்ட பிற இனவாத சக்திகளின் நிலைப்பாடுகளும் இலங்கை மண்ணில் இந்தியா தமது படைகளை நிலை நிறுத்திக்கொள்வதற்கு இந்தியாவிற்கு நல்ல சாட்டாக அமைந்தது.

இந்தியப் படைகள் இங்கு நிலைகொண்டமை இலங்கையின் அரசியல் வாழ்வு மேலும் ஒருபடி இராணுவமயமாவதையே துரிதப்படுத்தியது. எல்.ரி.ரீ.ஈ ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கங்களுக்கிடையிலான மோதல்கள் பயங்கர அழிவுக்குத்தான் இட்டுச் செல்லும் என்பது உறுதியாகி விட்டது.

புலிகளுக்கெதிராக ஈ.பி.ஆர்.எல்.எப் பை இந்தியா இராணுவ ரீதியில் பலப்படுத்திய அதேநேரம் எல்.ரி.ரீ.ஈ இலங்கை அரசின் உதவியை நாடி நின்றது. ஏறத்தாழ எல்லா சக்திகளுமே ஒன்று மற்றக் குழுக்கள் மீது தாக்குதலை மேற்கொள்ளும் நோக்கிலோ அல்லது தற்காப்பு நோக்கம் கருதியோ ஆயுதமயமாக்கப்பட்டிருந்தன.

ஏதாவதொரு ஜனநாயக அரசியல் கருத்துப் பரிவர்த்தனைக்காக நிலவிய கொஞ்சநஞ்ச 'அரசியல் அவகாசத்தையும்' (கட்டுரையாசிரியர் இதனை *political space* என்று கூறுகிறார்) பயங்கரவாதமும் வன்முறையும் மரணமும் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டது. ஆயுத நடவடிக்கைகளால் இந்த அரசியல்






படிப்பகம்

www.padippakam.com

வகாசமும் (அல்லது அரசியல் ருத்துப் பரிமாறல் செய்து காள்வதற்கு திறந்திருந்த சின்ன டை வெளி கூட) முடுண்டு ானதும் இன ரீதியான வேறுபாடுகள் ்ண்டும் புதிதாய் தலை தூக்கின

ஒவ்வொரு இனத்திற்குள்ளும் று ந்தேசியவாத உணர்ச்சிகள் யுதரீதியில் வெறித்தனமாக வளிப்பாடு கண்டபோது ன்னென்றுமில்லாதவாறு அவை வொரு சமுகத்தையும் எதிரும் ருமான துருவ நிலைக்குத் தள்ளியது.

## த்த இராணுவ ாதத்தைக் களைதல்

இந்த தேசத்தை அதன் பிவிலிருந்து மீட்கும் ஒரு வடிக்கையாகவும்- இத் தேசத்தில் லின மக்கள் வாழும் தன்மையை ணிப் பாதுகாப்பதற்காகவும் ரசியல்ரீதியான கருத்துப் பர்த்தனைகளை மேற்கொள்ள ஒரு சியல் அவகாசத்தை உருவாக்கி னை வளர்த்தெடுக்க வேண்டும்

ஜனநாயக உரிமைகள் ,எவ்வாறு பேணிப்பாது காக்கப்பட வேண்டும் என்றும் அதிலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விசேசமாக தமிழர்களுக்கு அந்த உரிமைகள் விஸ்தரிக்கப்படவேண்டும் என்பது பற்றியும் நாடு தழுவிய பிரக்ஞை உருவாக்கப்பட வேண்டும்.

அரசியல் கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு சூழலை உருவாக்க வேண்டும். குறுந்தேசியவாத சக்திகள் ஆயுதம் தரிக்கும் வரை - அரசியல் கருத்துப் பரிமாற்றத்திற்கு வன்முறை என்ற ஒரேயொரு மொழியை விட வேறு ஒரு மொழியுமே இல்லை என்று அத்தகைய சக்திகள் கருதும் பட்சத்தில் நாம் மேலே கூறிய கருத்துப் பரிவர்த்தனை என்பது சாத்தியமே இல்லையாகி விடும். ஒவ்வொரு சமுகத்தின் மத்தியிலும், அது சிங்களவர் மத்தியில் ஜே.வி.பி/டி.ஜே.வி.பி யாக இருந்தாலென்ன அல்லது தமிழர் மத்தியில் எல்.ரி.ரீ.ஈயோ அல்லது வேறு தீவிரவாதக் குழுக்களாக இருந்தாலென்ன, அவை நிலைகொண்டு ஆதிக்கம் பெறுவதை நாம் அனுமதித்தோமானால் நாடு இன்னும் இருண்ட அரசியல் சூனியத்தை நோக்கித்தான் செல்ல நேரும்.

மக்கள் தங்கள் கருத்துக்களை



படிப்பகம்

www.padippakam.com

சுயமாக வெளியிடக் கூடிய ஜனநாயக, அரசியல் அவகாசம் இல்லாது போனால்- ஜனநாயக அமைப்பு இல்லையென்றாகி விட்டால் அதிகாரத்தை அவாவி நிற்கும் வன்முறை ஆயுதக் குழுக்கள் இந்நிலையில் பாரதுாரமான தீமைகளையே கொணர்ந்து சேர்க்கும்.

இலங்கையில் இன்றைய சூழலில் இத்தகைய ஒரு சாத்தியப்பாடு இல்லை என்று முற்றுமுழுதாக நிராகரித்து விடமுடியாது. எனவேதான் சுத்த இராணுவ வாதத்தைக் களையும் ஒரு செயற்பாடு நம்முன்னுள்ள உடனடிப் பணியாக உள்ளது. சுத்த இராணுவ வாதத்தைக் களையும் இந்த நடவடிக்கையில் அரசின் பொறுப்புத்தான் மிகவும் பாரியது.இன்றைய இந்த நெருக்கடி நிலை தோன்றியதற்கான மூல காரணங்களைத் தேடி அவற்றை நீக்குவதற்கான முயற்சியில் அரசு உண்மையிலேயே தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.

சிங்கள பௌத்த தத்துவார்த்தத்திற்கும் பாரம்பரியத்திற்கும் முண்டு கொடுக்கும் அரசின் போக்கு ஒரு முற்றுக்கு கொண்டுவரப்பட வேண்டும். பல் இன மக்களும் பல் தேசியக் கலாசாரமும் இன்று அரசியல் ரீதியில் உணர்வுபூர்வமான பிரச்சனைகளாகி விட்ட இலங்கை போன்ற ஒரு தேசத்தில் அரசும் அரச யந்திரமும் மதசார்பற்ற கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என்பது ஒரு வெளிப்படையான உண்மையாகும். நமது அரசியல் வாழ்க்கையிலிருந்து சுத்த இராணுவ வாதத்தைக் களைந்தெறிவதற்கு தமிழர்களுக்கு அரசியல் அதிகாரப் பரவலாக்கத்தினை வழங்குவது அத்தியாவசிமானதாகும். இலங்கை அரசியலை ஜனநாயக மயமாக்கும் நடவடிக்கையுடன் இது இணைந்து செயற்பட வேண்டும்.

இன்றைய நெருக்கடியான தீர்வை இராணுவ ரீதியிலான வெற்றி அல்லது தோல்வி என்ற அர்த்தத்தில் பேசிக் கொண்டிருந்தால் அழிவுதான் மிஞ்சும். இன்றைய இந்தப் போராட்டத்தில் யார் வென்றாலும் அது அரசாக இருந்தாலென்ன, வேறு ஆயுதக் குழுக்களாக இருந்தாலென்ன அந்த வெற்றி பொது மக்களின் விடுதலையின்,சுதந்திரத்தின் அழிவில் தான் பெறப்பட்டிருக்கிறது என்றுதான் அர்த்தம்.யாரோ ஒரு சாரார் வெற்றி அடைகின்றனர் அல்லது தோல்வியைத் தழுவுகின்றனர் என்றால் மறுசாரார் ஆயுதமுனையில் ஒடுக்கப்படுகிறார்கள்



படிப்பகம்

www.padippakam.com

ன்றும் ஜனநாயக அரசியலுக்கான
றிய வாயில் கூடமுடப்பட்டு விட்டது
ன்றுதான் அர்த்தமாகும். வருகின்ற
ாலங்களில் இலங்கை சமூகத்தின்
ரட்சிகரமான மாற்றங்களுக்கான
டவடிக்கைகளை பாரதூரமாக
ன்தள்ளச் செய்யும் நிலையையே இது
ாடி காட்டுகிறது. ஒவ்வொரு இனவாரி
முகமும் அடையவேண்டிய
ாா்ச்சியுடனும் அதற்கப்பாலும் முழு
லங்கையினதும் பரந்துபட்ட வளர்ச்சி
ற்றிய கண்ணோட்டத்திலிருந்தும்
ந்த இராணுவ வாதத்தைக் களையும்
-வடிக்கை மிக இன்றியமையாததாகும்.

ன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியை ஒரு
ட்சிகரமான நெருக்கடிச் சூழலாகக்
ந்துவதற்கில்லை. ஜே.வி.பி/டி.ஜே.வி
னர் முன்வைத்துள்ள அரசியற்
ாரிக்கைகள் தற்போதைய அரசியல்
நருக்கடியின் தன்மையானது
ராம்சத்தில் பாசிஸத்திற்கு முன்னைய
லகட்ட குணாம்சங்களையே
காண்டுள்ளது என்பதையே
வளிப்படுத்துகின்றன.
.வி.பி/டி.ஜே.வி தலைமையை அழித்து
ட்ட பிறகு அரசினது
யுதப்படையினர் உண்மையான
ர சி ய ல்
திகாரத்தினைக்கொண்டவர்களாகத்

திகழ்வது சாத்தியமே. ஏனெனில் சிவில் சமுகம் அரைகுறையாகக் கூடச் செயற்படுவதைக் காணோம். அது செயலிழந்து ஸ்தம்பித்து நிற்கிறது. எனவே இராணுவவாதத்தைக் களைவதுதான் இன்றைய நெருக்கடிக்கான தீர்விற்கு நம்முன்னுள்ள ஒரே ஒரு வழியாகும். ஜனநாயகத்தை விஸ்தரிப்பது தொடர்பாக பேசும்போது, தற்போது நடை முறையில் உள்ள அடக்குமுறைச் சட்டங்களான பயங்கரவாத தடைச் சட்டம், நட்டஈட்டு உத்தரவாத மசோதா மற்றும் அவசரகால சட்டங்கள் போன்றன நீக்கப்பட வேண்டுவது மிகவும் அடிப்படையானதாகும்.

ஏனெனில் இந்த சட்டங்களே இராணுவ நடவடிக்கையின் போது ஆயுதப்படையினருக்கு கேள்விக்கு இடமில்லாத அதிகாரங்களை வழங்குகிறது. இதே அடக்குமுறைச் சட்டங்களையே அரசானது ஜனநாயகரீதியில் செயற்படும் எதிர்கட்சியினை நோக்கியும் பிரயோகித்துள்ளனர். ஜே.வி.பி/டி.ஜே.வி. அல்லது எல்.ரி.ரி.ஈ. ன் இராணுவவாதத்தை தார்மீக ரீதியில் நியாயப்படுத்தவே இது துணை



படிப்பகம்

www.padippakam.com

புரிந்துள்ளது. இலங்கையின் பின்னணியில் இராணுவவாதத்தைக் களைதல் என்பது அரசியல் யாப்பு ரீதியிலான மாற்றங்களோடு முன்னெடுக்கப் படவேண்டும். இன்று ஆட்சியிலிருக்கும் அரசு இந்த பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க முடியாத ஒரு கையாலாகாத் தன்மையையே காட்டி நிற்கிறது. எனவே இந்த அரசாங்கம் வெளியேற வேண்டுவதும் பொதுத் தேர்தலை நடத்துவதும் அவசியமானதாகும்.

ஆயுதக் குழுக்கள் நிலைபெற்றுக் கொண்டிருக்கும்வரை, அவை நிலை பெறுவதற்கான அரசியல் சூழ் நிலைகள் அப்படியே நிலவும் வரை பொது தேர்தல் என்பதிலும் அர்த்தம் எதுவும் இல்லைதான். இதனால் தான் இராணுவ வாதத்தைக் களைதல் என்பது மிகவும் கடினமான காரியமாகவும் மாறியுள்ளது. சோசலிச சனநாய சக்திகள் தமிழர்களது உரிமைகளைப் பொறுத்தவரை ஒரு திட்டவட்டமான கொள்கை அடிப்படையிலான நிலைப்பாட்டை எடுப்பதன் மூலம் இந்த இராணுவவாதத்தைக் களையும் நடவடிக்கைக்கு பெருந் துணை புரிய முடியும். இவர்கள் சிங்கள பௌத்த தத்துவார்த்தத்திற்கு எதிராக கோட்பாட்டு ரீதியிலும் அரசியல் ரீதியிலும் உறுதியான போராட்டத்தைக் கொண்டு நடத்த வேண்டும். இது சாத்தியமில்லை யென்றாகிப் போனால் ஒவ்வொரு இனத்திற்குள்ளும் பின் இனங்களுக்கிடையேயும் ஆயுத மோதல்கள் தொடர்ந்து நீடிக்கவே செய்யும். இத்தகைய கோட்பாட்டு ரீதியான- அரசியல் போராட்டம் என்பது உடனடியாகச் செய்து முடித்து விடக் கூடிய காரியமில்லைத் தான். சிங்கள பௌத்த மேலாதிக்கவாத சக்திகள் லேசில் விட்டுக் கொடுத்து இணங்கிப் போகக் கூடியன அல்லவாதலால் இந்த செயல் முறை சிறிது மெதுவாகவே நடை பெற முடியும். இத்தகைய ஒரு போராட்டம் இல்லாமல்- சகல இன சமுகமும் சமத்துவமான அரசியல் உரிமைகளைக் கொண்டமைகின்ற ஒரு உண்மையான இலங்கைத் தேசியவாத தத்துவார்த்தம் ஒருநாளுமே சாத்தியமாகாது. ஆயுதக்குழுக்கள் ஆதிக்கம் வகிக்கும் வரை அந்நிலை இத்தகைய அரசியல், ஜனநாயப் பணிக்கு குந்தகமாகவே அமையும்.

*DEMILITARISATION OF POLITICS IN SRI LANKA: AN URGENT AND DIFFICULT TASK*

என்ற தலைப்பில் *Dayapala Thiranagama* எழுதி *INQUILAB (SPRING 1990, VOL:1, NO:1)- LONDON* காலாண்டு சஞ்சிகையில் வெளியான ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்.

படிப்பகம்